பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை 13.08.2023 கதிர் 275

# வீரமுனைப் படுகொலைகளுக்கு நீதியும் நிவாரணமும் வேண்டும்

## காரைதீவு முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் வலியுறுத்து



**( வி.ரி. சகாதேவராஜா)**

**நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் வீரமுனையில் 33 வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தினுள் வைத்து வெட்டியும் கொத்தியும் கொடூரமாக குரூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை அப்படுகொலைகள் குறித்து நீதியான விசாரணை நடத்தப்பட வில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித நிவாரணமும்** ☞2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல், அதில் ரணில் விக்கிரமசிங்க முதன்மை வேட்பாளர் என்றெல்லாம் ஊடகங்கள் எதிர்வுகூறிக்கொண்டிருக்க ஒருவர் மட்டும் மிகத் தெளிவாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியடவே மாட்டார், கௌரவமாக ஓய்வுபெற்றுச் சென்றுவிடுவார் என்று அடித்துக் கூறியிருக்கிறார்.

அவர் வேறு யாருமல்லர் மகிந்த குடும்பத்தினருக்கு மிக நெருக்கமானவரான உதயங்க வீரதுங்க. வாசகர்கள் இவரை நினைவில் வைத்திருப்பார்கள் என்றே நினைக்கின்றேன். மகிந்தவின் நெருக்கமான உறவினர். மட்டுமல்ல நம்பிக்கைமிக்க உறவினரும்கூட. மகிந்த காலத்தில் ரஷ்ய நாட்டுத் தூதுவராக இருந்தவர். உக்ரேனிடம் இருந்து மிக்ரக விமானங்களை வாங்கியதில் ஊழல் நடந்தது என்கிற குற்றச்சாட்டில் இவரது பெயரும் 2015இல் பிரபலமாக அடிபட்டது. கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில், கொரோனாவுக்கு மத்தியிலும் ரஷ்யா மற்றும் உக்ரேனில் இருந்து சுற்றுலாவிகளை அழைத்துவந்து பரபரப்பையும் கிச்சுக்கிச்சுவையும் மூட்டியவர்.

மகிந்த குடும்பத்துடன் அவருக்கு இருக்கும் நெருக்கம் காரணமாக உள்வீட்டுத் தகவல்களில் அவர் ☞2

## ‘அஸ்வெசும’ மீளாய்வு நாளை தொடங்குகிறது

‘அஸ்வெசும’ உதவித் திட்டம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஆட்சேபனைகள் மீதான மீளாய்வு நடவடிக்கை நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து நலன்புரி நன்மைகள் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

’அஸ்வெசும’ உதவித் திட்டம் குறித்த அனைத்து அறிவுறுத்தல்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் ☞2

# பிரபாகரன் படத்துடன் கிழக்கில் சுவரொட்டி




(பாறுக் ஷிஹான்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கைத்துப்பாக்கியுடன் இருக்கும் படத்துடன் கிழக்கில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 1990 ஒகஸ்ட் 11 என்று பொறிக்கப்பட்ட அநாமதேய சுவரொட்டியாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் இவை பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

1990 ஆண்டு ☞2

# கலைநிகழ்வுகளுக்கு கட்டணத்துடன் கட்டுப்பாடுகளும் விதிக்கிறது அரசு

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு திரைப்படங்கள், மேடை நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகளுக்கான அனுமதிக் கட்டணம் ஒகஸ்ட் 15 முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சரால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெளிநாட்டு திரைப்படங்களுக்கு 40,000 ரூபாயும் உள்நாட்டு திரைப்படங்களுக்கு 15,000 ரூபாவும் அனுமதிக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.

முன் விளம்பரப் படத்திற்கு மாத்திரம் 1500 ரூபாயும் வரையறுக்கப்பட்ட காட்சிகளுக்கு டி.வி.டி. ஃப்ளுரே திரைப்படங்களுக்கு 1500 ரூபாயும் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட பணி ஆய்வுகளுக்கு திரையரங்குகளை பயன்படுத்தும் போது கட்டணமாக 37,500 ரூபாயும், மேடை நாடகங்களை பொறுத்தவரை நீண்ட மற்றும் குறுகிய நாடகங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்ட நாடக கட்டணங்களாக 1500 ரூபாவும் குறுகிய நாடகங்களுக்கு 750 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும். மேடை நடகங்கள் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்கள் காட்சிபடுத்தலுக்கு 21 நாட்களுக்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும். குறித்த கால எல்லைக்குள் வழக்கப்படாத பிரதிகளுக்கு உரிய கட்டணத்தின் நூற்றுக்கு நூறு சதவீத மேலதிக கட்டணம் அறவிடப்படவுள்ளது.

மேலும், இசைக் கச்சேரிகள் மற்றும் காட்சிப்படுத்தல் கட்டணங்களாக, உள்நாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் இசை கச்சேரிகளுக்கு 3,750 ரூபாவும், உள்நாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் மண்டப இசைக் ☞2

### சர்வதேச நாணய நிதியத்தின்

# 2ஆம் தவணைக் கடனுக்காக செப்டெம்பரில் மீளாய்வு

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக்கொடுப்பனவைப் பெறுவதற்கான மீளாய்வுக் கூட்டத்தை செப்டெம்பர் 11 முதல் 19 வரை தொடர்ந்து 8 நாட்களுக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்லவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக்கொடுப்பனவைப் பெறுவதற்கான அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

செப்டெம்பர் மாதக் கூட்டத்தின் பின்னர் இலங்கை, கோரப்பட்ட கடன்தொகையின் இரண்டாம் தவணையை பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அத்துடன், இத்திட்டத்தை செயற்படுத்துவதில் இலங்கை உறுதியாக இருக்கின்றதா என்பதை சர்வதேச நாணய நிதியம் அவதானித்து வருவகிறது.

மத்திய வாங்கி, நிதி அமைச்சு மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் இந்த மீளாய்வுக் கூட்டத்தில் நாணய நிதிய அதிகாரிகளும் கலந்து கொள்ள ☞2

### ஸ்ரீரங்கா வழக்கில்

# பொலிஸ் அதிகாரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா வழக் கில் சாட்சியங்களை மறைக்க முயன்ற பொலிஸ் பரிசோதகருக்கு 7 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 24 மாதசிறைத்தண்டனை வவுனியா மேல் நீதிமன்றத்தால் வழுங்கப்பட்படடது.

2011 ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா செலுத்தி சென்ற ஜீப் வண்டி விபத்திற்கு உள்ளானத்தில் அதில் பயணித்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தாக்கல் செயயப்பட்ட பீ அறிக்கை போலியானது என தெரியவந்ததையடுத்து, வவுனியா மேல் நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்றுவரும் வழக்கில் சாட்சியங்களை மறைக்க முற்பட்ட பொலிஸ் பரிசோதகர் ரொசான் சஞ்சீவ அவர்களுக்கு 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 24 மாத கால சிறைத்தண்டனை வழங்கி, மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிகாஸ் உத்தரவிட்டார்.

கொல்லப்பட்ட அதிகாரியே வாகனத்தை ஓட்டிச் சென்றார் எனக் கூறி வவுனியா நீதிமன்றத்தில் பீ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ☞2

# கொழும்பு வந்த சீன கப்பல் மீது இந்தியா கடும் கண்காணிப்பு

சீன போர்க் கப்பலை மிகத்தீவிரமாக கண்காணித்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; நாட்டின் பாதுகாப்பு நலன்களை பாதிக்கும் எந்தவொரு நகர்வையும் இந்தியா கவனமாக கண்காணிக்கிறது.

இந்தியா தனது பாதுகாப்பு நலன்களுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

(இலங்கைக்கு வந்துள்ள சீனக்கப்பல்) இது ஒரு போர்க் கப்பலா இல்லையா என்பது தெரியவில்லை. அது பற்றிய அறிக்கைகளைப் பார்த்தபின், நாட்டின் பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு நகர்வையும் அரசு கவனமாகக் கண்காணித்து, அவற்றைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக் கிறது என்பதை நான் வலியுறுத்துகிறேனசூ என்றார்.

இதேவேளை, சீன போர்க் கப்பல் கடந்த 10 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்த நிலையில், நேற்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளது.

கடந்த ஒருவருட காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த இரண்டாது சீன போர் கப்பல் இதுவாகும் என்பதோடு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் யுவான் வாங் 5 என்ற சீன விண்வெளி ஆய்வுக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்திருந்தது. இந்தக் கப்பலின் வருகை இந்தியா, இலங்கை உறவில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்காவும் குறித்த கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு வெளி யிட்டிருந்தது.

### பூநகரி, பொன்னாவெளியில்

# சுண்ணக்கற்கள் அகழ்வதற்கு முன்னாள் எம்.பியும் எதிர்ப்பு

மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அழிக்கும் அபிவிருத்தி தேவைற்றது.

மக்களின் பூர்வீக வாழ்விடங்களை இல்லாதெழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு அபிவிருத்தியும் தேவையற்ற ஒன்றே.

அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் நன்மை பெறுமே தவிர, மக்கள் வாழ்விழந்து போவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

சிமெந்து நிறுவனம் அமைக்க பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வதற்கு எதிராக பூநகரி, வேரவில் பகுதியில் தொடர்ந்து பத்தாவது நாளாக நடைபெற்றுவரும் சுழற்சிமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவாக அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டபோது சந்திரகுமார் இதனைத் தெரிவித்தார்.

பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்துதொழிற்சாலைக்கான மூலபொருளான ☞2

# கிழக்கு ஆளுநருக்கு எதிராக பிக்குகள் பலர் வீதி மறியல்

### சம்பந்தனுக்கு எதிராகவும் முழக்கம்

திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் விகாரையின் நிர்மாணப் பணி இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் சிலர் நேற்று இலுப்பைக்குளம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தைக் குழப்புகின்ற ஆளுநரை உடனடியாக வீட்டுக்கு அனுப்புவோம்‘, ‘புத்தசாசன அமைச்சால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்?” போன்ற பதாதைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலாவெளி பெரியகுளம் பகுதியில் 500இற்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்களும், இரு சிங்களக் குடும்பங்களும் வசித்து வருகின்றன. இந்நிலையில் விகாரை நிர்மாணிப்புப் பணிகளை நிறுத்துமாறு கோரி அங்கு வாழும் தமிழ் ☞2

# ரணிலுடன் கைகோர்க்க வருமாறு சம்பந்தனுக்கு பிரதமர் அழைப்பு



‘ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் கைகோர்த்துச் செயற்பட முன்வர வேண்டும்.‘ என்று அழைப்பு விடுத்துள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘இது விவாதம் செய்யும் காலம் அல்ல. நாட்டுக்காக - மக்களுக்காக கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் காலமே இது.

அரசமைப்பின் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சொல்கிறவிடயங்கள்பெரும்பாலும் உண்மையாக அமைவதுண்டு. ஊடகவியலாளர்களுடன் எப்போதும் நல்லுறவைப் பேணக்கூடியவரான அவர், அவ்வப்போது இப்படி மகிந்த குடும்பத்திற்குள்ளும் கட்சிக்குள்ளும் இருக்கக்கூடிய விடயங்களையும் அவிழ்த்துவிடுவார். இப்போது எல்லோரும் எதிர்பார்ப்பதற்கு மாறாக ரணிலை மொட்டுக் கட்சி ஆதரிக்காது, அதனால் அவர் அடுத்த தேர்தலில் போட்டியிடவே மாட்டார், மகிந்தவுக்கு முன்னரே கௌரவமாக ஓய்வுபெற்றுச் சென்றுவிடுவார் என்று தெரிவித்திருக்கிறார்.

இணையத் தளம் ஒன்றுக்கு கடந்த வாரம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். கடைசிவரைக்கும் ரணிலுக்கு மொட்டுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்காது, அது தனியான வேட்பாளரை நிறுத்தும் என்கிறார் அவர்.

நான் பகடையை உருட்டிச் சொல்கின்றேன், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார். மொட்டுக் கட்சி தனக்கு ஆதரவாக வாக்களிக்காது என்று ரணிலுக்கு நன்றாகவே தெரியும். மொட்டுக்கட்சியின் பலதலைவர்கள் ரணிலுக்கு வாக்களிக்குமாறு கேட்டாலும் கிராமங்களில் உள்ள மொட்டுக் கட்சி வாக்காளர்கள் ரணிலுக்கு வாக்களிக்கவே மாட்டார்கள். அதனாலேயே நான் நிச்சயமாகச் சொல்கின்றேன் ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிடமாட்டார்.

இதற்கு முன்னர் நான் சொல்லியவை எவையும் பொய்யானதில்லை. கோட்டாபயவை அரசியலுக்குக் கொண்டு வந்தபோதும் நான் சொன்னேன், அரசியல் அவருக்கு நல்லதல்லஎன்று. அவர்வீட்டுக்குச் செல்லவேண்டும் என்று நான்தான் முதலில் சொன்னேன். கோட்டா ஜனாதிபதிப் பதவியிலிருந்துவிலகுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அதனைக் கூறினேன். இந்த நாட்டுமக்கள்கோட்டாபயவை தோற்கடித்து தூக்கி எறிவார்கள் என்பதையும் சொன்னேன். எனவே நான் சொன்னவை எவையும் பொய்யானதில்லை.

மொட்டுக் கட்சியில் உள்ள பலரும் அதன் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவைச் சந்தித்து, நாங்கள் ரணிலுடன் செல்லப் போவதில்லை, நாங்கள் மொட்டுவிலேயே இருக்கின்றோம் என்று உறுதிப்படுத்தி வருகின்றனர். நேற்றுமுன்தினம்கூட (இந்தப் பேட்டி வழங்கப்படுவதற்கு இரு நாள்கள் முன்னதாக) கம்பஹாவைச் சேர்ந்த மொட்டுவின் பலமான அரசியல்வாதி ஒருவர் பஸிலைச் சந்தித்து, தான் மொட்டுவுடன்தான் இருக்கிறார் என்பதைப் பஸிலிடம் உறுதிப்படுத்தினார் என்றும் உதயங்க தெரிவித்திருக்கிறார்.

மகிந்த குடும்பத்துக்கு மிக நெருக்கமானவரான உதயங்கவின் இந்தக் கருத்துக்கள்தான் கடந்த வாரம் முழுவதும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பெரும் பரபரப்பான கிசுகிசுவாக ஓடித் திரிந்ததாம். மலிந்தால்எல்லாம்சந்தைக்கு வந்துதானே தீரும், இல்லையாக வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வீரமுனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவில்லை. இரண்டும் கிடைக்க வேண்டும்.

இவ்வாறு வீரமுனைப் படுகொலையின் 33ஆவது வருடநினைவேந்தல்நிகழ்வு நேற்று இடம் பெற்றபோது கலந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளைஜெயசிறில் வலியுறுத்தினர்.

நினைவேந்தல் நிகழ்வு ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் வீரமுனை படுகொலை நினைவுத் தூபி முன்றலில் இடம்பெற்றது. பின்னர் ஆலய வளாகத்தில் பொது நினைவேந்தல் நடைபெற்றது.

அங்கு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளைஜெயசிறில் மேலும்பேசுகையில்தெரிவித்ததாவது:

சம்மாந்துறை வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990 ஜூன் மாதம் முதல் யூலை மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்.

ஒகஸ்ட் 12 ஆலயத்தினுள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படைக் கும்பல் ஒன்று 400க்கும் அதிகமான பொது மக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர்.

இவர்களில் பெண்கள், குழந்தைகளும்கூட அடங்குவர். இன்று 33, ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் எவரும் தண்டிக்கப் படவில்லை.

நீதியும் நியாயமும் கிடைக்கவில்லை. அது கிடைக்கவேண்டும்-என்றார்.

## ‘அஸ்வெசும’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' உதவித் திட்டம் தொடர்பில் இதுவரை 217,000 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த ஆட்சேபனைகளை ஐந்து நாட்களுக்குள் ஆய்வு செய்துமுடிப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 800,000 மேன்முறையீடுகள்விசாரணைக்குட்படுத்தப் படவுள்ளன. இதனிடையே, பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படும் நிலையில், 15 இலட்சம் பயனாளர்களுக்கு அடுத்த வாரம் முதல் தவணைக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றுள்ளது.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒகஸ்ட் மாதம் ஏறாவூர் மற்றும் காத்தான்குடி பகுதியில் விடுதலை புலிகளால் படுகொலை செய்யப்பட்ட எமது நண்பர்களையும் உறவினர்களையும் நினைவு கூறுகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை புலிகளுக்கு ஆதரவான அனைத்து நியாயங்களையும் கண்டிக்க வேண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளில் ஞாயப்படுத்துவதற்கு கனேடிய அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உண்மையை புரிந்து கொள்ள வேண்டும் .அனைவரும் பாராபட்சம் இன்றி இருங்கள்-என இந்தச் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர், ஒலுவில், சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட் டிருந்தன.

## கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரிகளுக்கு 3,700 ரூபாவும், வெளிநாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் திறந்தவெளி கச்சேரிகளுக்கு 37,500 ரூபாவும் அறிவிடப்படுமெனவும் வெளிநாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் மண்டப மற்றும் தொலைக் காட்சி, வானொலி மூலம் நேரடியாக ஏற்பாடு செய்யப்படும் கச்சேரிகளுக்கு 37,500 ரூபாவும் முன்பள்ளி கச்சேரிகளுக்கு 2000 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்கள் காட்சிபடுத்தலுக்கு 10 நாட்களுக்கு முன்னதாக ஒப்படைக்கப்படவேண்டும் என்பதோடு, சமூக, கல்வி, கலாசார மற்றும் சமய முக்கியத்துவமிக்க எந்தவொரு காட்சிபடுத்தலுக்குமான அனுமதிக் கட்டணத்தை 14 நாட்களுக்கு முன்னர் எழுத்துமூலம் சமர்ப்பி வேண்டும்

மேலும், அனுமதிப் பத்திரங்கள் காணாமல் போகும் பட்சத்தில் மீண்டும் ஒன்றை பெற்றுக்கொள்ள, 1500 ரூபா கட்டணமாக அறவிடப்படும் என்றுள்ளது.

## 2ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளனர். இந்த வேலைத் திட்டத்தினை அரசு வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்துடன் 9 இணக்கப்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, முதற்கட்டமாக 2.9 பில்லியன் டொலர்களுக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில், குறித்த நிதியானது 2027ஆம் ஆண்டுவரை 8தவணைகளில் கிடைக்கும் - என்றார்.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது

செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் ரொசான் சஞ்ஜீவ கையெழுத்தை போலியாக இட்டே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

இந்த விபத்து 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி செட்டிக்குளம் பிரதேசத்தில் மாலை 4.30 அளவில் நடந்துள்ளது.

ஸ்ரீ ரங்கா ஓட்டிச் சென்ற லேண்ட் கிறசர் ரக ஜீப் வண்டியே விபத்துக்குள்ளானது. மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற பொழுது ஜீப் வண்டி வீதியை விட்டு விலகி, செட்டிக்குளம் வைத்தியசாலையின் மதில் சுவரில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஸ்ரீ ரங்காவின் பாதுகாப்புக்காக இணைக்கப்படடிருந்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த உறுப்பினர் புஸ்பகுமார என்பவர் உயிரழந்தார்.

எனினும்ஸ்ரீரங்காவிடம் விசாரணை நடத்திய போது தான் வாகனத்தை ஓட்டிச் செல்லவில்லை எனக் கூறியுள்ளார். ஸ்ரீ ரங்கா வாகனத்தை ஓட்டிச் சென்றமைக்காக முக்கிய சாட்சியங்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. இதனைதொடர்ந்து விசாரணைகளில் மூலம் கிடைத்த அனைத்து சாட்சியங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைகளின் படி உடனடியாக அடுத்த கட்ட விசாரணைகள்நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நீதிமன்ற விசாரணகள் தொடரந்துநடைபெற்றுவந்த நிலையில்வழக்கில் பொலிஸ் பரிசோதகர் ரொசான் சஞ்ஜீவ ஸ்ரீ ரங்காவை காப்பாற்றுவதற்காக சாட்சியங்களை மறைக்க முற்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன.

அதாவது முதலாவது குற்றமான குற்றவாளியின் குற்றங்களை மறைத்து தப்பிக்க வைத்த குற்றத்துக்காக 7வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாதகால சிறைத் தணடனையும், போலியான ஆவணங்கள் தயாரித்தமைக்காக 7 வருடங்களுக்கு ஒத்திவைக் கப்பட்ட 6 மாதகால சிறைத் தணடனையும், மூன்றாவது குற்றச்சாட்டாக போலியான ஆவணங்கள் தயாரித்து உயர் அதிகாரிகளை ஏமாற்றிய குற்றத்துக்காக 7வருடங்களுக்குஒத்திவைக் கப்பட்ட 12 மாதகால சிறைத் தணடனையும் வழங்கப் பட்டது.

அத்துடன் சம்பவத்தில் கொல்லப்பட்டஅமைச்சரவை பாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி புஸ்பகுமாரவின் மனைவிக்கு நஷ்ட ஈடாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கவேணடும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை உடனடியாக இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு மிகுதி ஒக்டோபர் மாதம் 5திகதி வழங்கப்படவேணடும எனவும்திகதியிடப்பட்டது.

(100)

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பான தனதுமுன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நாடாளுமன்றத்தில் முன் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றியுள்ளார். இந்த உரை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த உரை.

எனவே, அரசதலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்னெடுக்கவுள்ள சகல வேலைத்திட்டங்களுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண் டும். அப்போது தான் அனைத்துப் பிரச்சி னைகளுக்குமான தீர்வுகளை நாம் விரைந்து காண முடியும்.' - என்றார்.

## சுண்ணக்கற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுண்ணக் கல் அகழ்வை மேற்கொள்ளவதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் நிறைவுற்றுள்ளது. தனியார் நிறுவனம் ஒன்று கடற்கரை கிராமங்களான மேற்படி கிராமங்களில் ஆயிரக்கணக்கானஏக்கர்நிலப்பரப்பில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழம்வரை சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்ளவுள்ளது. இது மிகப்பெரும் ஆபத்தை வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு கிராமங்களுக்கு உடனடியாகவும் ஏனைய அயல் கிராம மக்களுக்கு படிபடியாகவும் பாதிப்பை ஏற்படுத்த போகிறது. பொது மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையை இது உருவாகும்.

சுண்ணக்கல்லுக்காகத் தோண்டப்படும் குழிகள் ஊடாக கடல்நீர் நிலத்தடிநீரில் கலந்து குறித்த பிரதேசத்தில் உள்ள நன்னீர் உவர் நீராக மாற்றமடையும், பின்னர் நிலம் உவராக மாறும் இதன்போது மக்கள் அங்கு வசிக்க முடியாத நிலை உருவாகும். மேலும் தற்போது கிராஞ்சி குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இந்த பிரசேத்தின் நிலத்தடி நீரை மூலமாக கொண்டே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. சுண்ணக்கல் அகழ்வு காரணமாக இந்த நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்பட்டு குறித்த குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும், தொழிற்சாலை கழிவுகள், தூசுகளால் பொது மக்கள் நோய்த் தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இப்படி ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படும். குறிப்பாக அதனால் ஏற்படும் நன்மைகளை விட பாதிப்புக்களே அதிகமாக ஏற்படும்.

ஆகவே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதனை எமது சமத்துவக் கட்சியும் அந்த மக்களுடன் இணைந்து எதிர்க்கிறது. என்பதனை இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (113)

## கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

விகாரை நிர்மாணப் பணிகள் தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் இன முறுகல் ஏற்படக்கூடும் என்பதால் கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களின் நலன்களைப் பேணும் ஆளுநர் என்ற அடிப்படையில் இனங்களுக்கிடையில் இன முறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக விகாரையின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஆளுநரின்ஊடகப்பிரிவுவிடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# ‘சனல் ஐ’ தொலைக்காட்சியும் லைக்கா வசமானது!



இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'செனல் ஐ' தொலைக்காட்சி, தனியார் நிறுவனமான லைக்கா குழுமத்துக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் இலங்கை தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்துக்கு மாதாந்தம் 25 மில்லியன் ரூபாவை வழங்குகின்றது என 'அருண' என்ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்நட்டம்காரணமாக 'செனல் ஐ' தொலைக்காட்சியைத் தனியார் முதலீட்டாளரிடம் ஒப்படைக்க வெகுஜன ஊடக அமைச்சு தீர்மானித்திருந்தது. 'செனல் ஐ' தொலைக்காட்சி விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்புகின்றது.

இதேவேளை, ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தையும் லைக்கா குழுமத்திடம் ஒப்படைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

# மலையக மக்கள் பிச்சை கேட்கவில்லை; காணி உரிமையைத்தான் கேட்கின்றனர்

## தலவாக்கலையில் திகா முழக்கம்



'மலையக மக்கள் எவரிடமும் பிச்சை கேட்கவில்லை. தமக்கானஉரிமைகளையேகேட்கின்றனர். அந்தஉரிமைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானபழனிதிகாம்பரம்தெரிவித்தார்.

மலையக மக்களின் 200 வருட கால வரலாற்றை நினைவுகூரும் வகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் இன்று (12) ஹட்டனில் இருந்து தலவாக்கலை வரை முன்னெடுக்கப்பட்ட நடை பேரணியில் பங்கேற்று தலவாக்கலையில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே திகாம்பரம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நல்லாட்சிகாலப்பகுதியே மலையகத்துக்குப் பொற்காலம். அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எமது மக்களுக்காக எதுவும் நடக்கவில்லை. எமது ஆட்சிக் காலத்திலேயே காணி உரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டது. தனி வீடுகள் அமைக்கப்பட்டன. பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்பட்டன.

ஜனாதிபதி அழைத்ததும் அவருடன் பேச்சு நடத்துவதற்கு ஓடும் நபர்கள் நாங்கள் அல்லர். இந்த அரசிடமிருந்து ஒரு மண்ணாங்கட்டியும் கிடைக்காது என்பது எங்களுக்குத் தெரியும்.

எமது மக்கள் பிச்சை கேட்கவில்லை. உரிமையைத்தான் கேட்கின்றனர். தனிநாடு கோரவில்லை; 10 பேர்ச்சஸ் காணியைதான் எமது மக்கள் கோருகின்றனர். அது வழங்கப்பட வேண்டும்.' - என்றார்.

# அடிகாயத்துடன் குடும்பஸ்தர் சடலம் கல்வியங்காட்டில் மீட்பு



யாழ்ப்பாணம், கல்வியங்காடுபகுதியில்குடும்பஸ்தர் ஒருவர் நிர்வாணமாக அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளைமகேந்திரன் (வயது 54) என்பவரது சடலம் அது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருமணச் சடங்குக்குச் சென்றவேளை குடும்பஸ்தர் தனிமையில்வீட்டில்இருந்துள்ளார்.

நேற்றுக் காலை உறவினர் ஒருவர் இவர்களது வீட்டுக்குச்சென்றபோது, குடும்பஸ்தர் சடலமாகக் காணப்பட்டதை அவதானித்தார். அவர் உடனே சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தார். பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகா யங்கள் காணப்படுவதுடன், சடலம் நிர்வாணமாகவும் காணப்படுவதால் குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற யாழ். நீதிவான் மன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாமற்றும்சட்ட வைத்திய அதிகாரி மயூரன் ஆகியோர்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் ஆணின் சடலம்

மட்டக்களப்பில் ஆண் ஒருவர் நேற்று (12) பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு ஆரம்ப வைத்தியசாலை வளாகப் பகுதியிலுள்ள பஸ் தரிப்பிடக் கட்டடத்தில் இருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல்2மணியளவில்ஆண் ஒருவர்சடலமாகக்கிடப்பதைக் கண்டு அந்தப் பகுதி மக்கள் கொக்குவில்பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மைக்கல்என்று அழைக்கப்படும் நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதி பொதுக் கட்டடங்களானசந்தைமற்றும் பஸ் தரிப்பிடங்களில் தங்கி வாழ்ந்து வந்தவர்.

இவர் தொடர்பான மேலதிக விபரங்கள் இன்னமும்தெரியவரவில்லைஎன்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

# போதை அடிமைகளை மீட்க விரைவில் சிகிச்சை நிலையம்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் தகவல்

வடக்கில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை வைத்துப் பராமரிப்பதற்கு சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ் பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள்பாவனையாளர்கள்எண்ணிக்கைஅதிகரித்திருக்கிறது. ஆனால் இப்போது போதைப் பொருள் சம்பந்தமாக ஓரளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்ற போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இருப்பினும் முற்று முழுதாக போதப் பொருளுக்கு அடிமையானவர்களை நீண்ட காலமாக வைத்து பராமரிக்கும் நிலையம் வடபகுதியில் காணப்படவில்லை. அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின் அதற்கு பல்வேறுபட்ட வசதிகள் தேவையாக இருக்கின்றன.


இந்நிலையில் இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரும் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்.

அதேநேரத்தில் புதிதாக ஒருவர் போதை பொருளுக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது மிகவும் அவசியம் - என்றார்.



# இராவணனை ஆய்வு செய்யும் அதேவேளை இராமாயணத்தையும் ஆய்வு செய்யுங்கள்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



இராவணன் இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை. இராமாயணம் இல்லாவிட்டால் இராவணன் இல்லை. சீதையை இங்கு கொண்டுவராவிட்டால் இராமாயணத்துக்கும்இலங்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல் இருந்திருக்கும். எனவே இராவணனை ஆய்வு செய்யும் அதேவேளை, இராமாயணத்தையும் ஆய்வுசெய்ய வேண்டும் எனவே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இராவணன் பற்றிய ஆய்வை மேற்கொள்ளவேண்டும்எனவலியுறுத்திஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் புதிக்க பதிரணவால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்குமேலும்தெரிவிக்கையில்-

இராவணனை ஆய்வு செய்யும் அதேவேளை, இராமாயனத்தையும் ஆய்வுசெய்ய வேண்டும். ஏனெனில் இந்த நாட்டுக்கு வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருப்பதும் இராமாயணமாகும். இராமாயணத்தை ஒட்டி இந்தியாவில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அதனால் இராமாயணம் இந்த நாட்டுக்குத் தேவை. அத்துடன் சீதாஎலிய பகுதியில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என வரலாறுகளில் இருந்து எமக்கு அறிந்துகொள்ள முடியும். அதனால் இராவணனை ஏற்றுக்கொண்டு நாங்கள் நுவரெலியா சீதா எலிய பகுதியில் சீதாவுக்காக கோயில் அமைத்திருக்கிறோம்.

அந்த பகுதியில் யுத்தம் இடம்பெற்றதாகவும் இருக்கிறது. அந்த பகுதியிலேயே அனுமான் சீதைக்கு தனது கணயாளி மோதிரத்தைகொடுத்ததாககதைஇருக்கிறது. அதேபோன்று அந்த பகுதியில் இருக்கும் மண்கறுப்பாகஇருப்பதும்ஆய்வுகள்மூலம் தெரிந்துகொள்ளலாம். அந்தபகுதியில் அனுமானின் பாதம் பதிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டி ருக்கிறது. எனவே இந்த நிகழ்ச்சிகளுக்கு முக்கியமான விடயம் இராமர் என்பவரை நாங்கள் ஒரு கடவுளாக ஏற்றுக்கொள்கிறோம். இராமர் பிறந்த இடம் அயோத்தியில் இருந்து தான் அதிகமான சுற்றுலாபயணிகள் இங்கு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.அதனால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலமாக இருப்பதும் இந்த ராமாயணமாகும்.

எனவேஇராவணன் இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை. இராமாயணம் இல்லாவிட்டால் இராவணன் இல்லை. சீதையை இங்கு கொண்டுவராவிட்டால் இராமாயணத்துக்கும் இலங்கைக்கு எந்த சம்பந்தமும் இல்லாமல் இருந்திருக்கும். அதனால் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இதுதொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும். - என்றார். (05)

# இலங்கை தொழில்நுட்பத்தில் முன்னேறிய நாடு புஷ்பக விமானம் அதை உறுதிப்படுத்தியதாம்

## உதய கம்மன்பில இப்படிப் பெருமிதம்

இலங்கை தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்த நாடு என்பதை இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள புஷ்பக விமானம் உறுதிப்படுத்தியுள்ளது.

மகாவம்சத்துக்கு அப்பாற்பட்ட வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இராணவன் மன்னன் தொடர்பாக முறை சார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

உலகில் நாங்கள் நீண்ட வரலாறுகளை கொண்டமையால் மகாவம்சம் தொடர்பில் மாத்திரம் கதைத்து கொண்டிருக்கின்றோம். அதற்கு அப்பால் சென்று கதைப்பதில்லை. ஆனால் நீண்ட வரலாறுகளை நாங்கள் கொண்டுள்ளோம்.

இராமாயணத்தில் எங்கள் வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தொழில்நுட்பத்தில் நாங்கள் எந்தளவு முன்னேற்றத்தில் இருந்துள்ளோம் என்பது இராவணனின் புஷ்பக விமானம் எடுத்து காட்டியுள்ளது. இராவணனை நாங்கள் வணங்குகின்றோம். இராவணன் என்பவர் மருத்துவம், ஜோதிடம் விளை யாட்டு உள்ளிட்ட 10 விடயங்களில் சிறந்தவராக இருந்தஒருகாரணத்தாலேயே அவரை நாங்கள் பத்து தலை கொண்டவர் என்று கூறுகின்றோம்.

இராமாயணத்தைஎமது எதிரிகளின் கதை என்றே கூறலாம்.எல்லாகதைகளிலும் மூன்று கதைகள் இருக்கும் நண்பர்கள் கதை, எதிரிகள் கதை, இரண்டுக்கும்நடுவில் உள்ளஉண்மையானகதை என இருக்கும். இதன்படி இராமாயணம் எதிரிகளின் கதையாகஉள்ளது.உண்மை கதை வேறு.

நமது வரலாற்றில் பழங்குடியில் கண்டெடுக்கப்பட்ட எமது மனித வாழ்க்கை வரலாறுகள் 44 ஆயிரம் வருடங்கள்பழைமையானது. இது தொடர்பாக முறையான ஆய்வுகளை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார். (05)

# பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் காலம் போராட்டத்திலேயே கழிகிறது

## கல்வி அமைச்சர் சுசில் வருத்தம்

பல்கலைக்கழகங்களிலிருந்து கல்வி கற்று பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் 100 வீதமான மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற முடியும்.

இருப்பினும் சில மாணவர்கள் கல்வி கற்பதற்கும், புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் இருக்கும் காலத்தை போராட்டத்தில் ஈடுபட்டு கழிக்கின்றனர் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகமாணவர்களால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

உயர்தரத்தில் சித்தி பெறும் அனைவரும் பல்கலைக்கழகத்துக்குச் செல்ல முடியாது அல்லவா? நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இருந்து 40 ஆயிரம் மாணவர்களை மாத்திரமே உள்ளீர்க்க முடியும்.

இருப்பினும்ஒருலட்சத்து 60 ஆயிரம் பேர் சித்தி அடைகின்றனர். அவர்களுக்கு செல்ல இடம் ஒன்று தேவையாகும். சிலர் பணத்தை செலுத்தி செல்கிறார்கள். இதில்மற்றவர்களுக்குஉள்ள பிரச்சினை என்ன? இந்த பல்கலைக்கழகங்களிலிருந்து படித்துபட்டப்படிப்பைமுடித்து வெளி யேறும் 100 வீதமான மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற முடியும்.

மற்றைய பல்கலைக்கழகங்களில்உள்ளமாணவர்கள் கல்வி கற்பதற்கும், புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இருக்கும் காலத்தைப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கழிக்கின்றனர். - என்றார். (05)

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்





*யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக வெள்ளிக்கிழமை மதியம் பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*பாடசாலை முடிவடைந்ததும் பாடசாலை பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய உயர்தர மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் பாடசாலைக்கும் பாடசாலை அதிபருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்கள் வாயிலாக செயற்பட்டார் எனத் தெரிவித்தே மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*பாடசாலைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தாதே, கற்பிக்க வந்த இடத்தில் கள்ளத்தனம் எதற்கு, பாடசாலைக்குள் நடப்பது பாடத்திட்டமா அல்லது படப்பிடிப்பா போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர்.*

*இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த தெல்லிப்பழை கோட்டக் கல்வி பணிப்பாளர் வே.அரசகேசரி மாணவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (05)*

# மாளிகைக்காடு ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக அறிமுகமும், கௌரவிப்பும்





கடந்த வாரம் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரின் அறிமுகமும், கடந்த கால நிர்வாகத்தில் சிறப்பாக இயங்கிய செயலாளர் அபூபக்கர் அஹமட் றியாஸ் அவர்களுக்கான கௌரவிப்பும் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை தொடர்ந்து பொதுமக்கள்முன்னிலையில்அந்நூர் ஜும்மா பள்ளிவாசலில் நிர்வாக சபை தலைவர் ஏ. பௌசர் தலைமையில் நடைபெற்றது. மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் புதிய நிர்வாக சபையினாராக தெரிவு செய்யப்பட்டவர்களை நிர்வாக சபையின் உபசெயலாளர் யூ.எல்.என். ஹுதா பொதுமக்கள் மற்றும் ஜமாத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அந்தவகையில் புதிய நிர்வாக சபை தலைவராக அல்ஹாஜ் ஏ. பௌசர், செயலாளராக எப்.எம். ரஃபி, பொருளாளராக சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், உப தலைவராக அட்டாளைச்சேனை கல்வியியற்கல்லூரி உத்தியோகத்தர் ஏ.எம். ஜாஹிர் (ஜே.பி), உப செயலாளராக கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர், சிரேஷ்ட ஊடகவியலாளர் அல்ஹாஜ் யூ.எல்.என். ஹுதா உமர், கணக்கு பரிசோதகராக மௌலவி ஏ.எல்.ஏ. சுஜா (ஸஃதி, பின்னூரி) ஆலோசகராக எம்.ஐ. இஸ்திகார் ஆகியோருடன் மேலும் 18 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் இந்நிகழ்வில் நாட்டினது பொருளாதார நெருக்கடி, சுகாதார சிக்கல் மிக்க கொரோனா தொற்றுக்காலத்தில் இந்த இறை இல்லத்தை சிறப்பாக கொண்டுசெல்ல வழங்கிய அர்ப்பணிப்புமிக்க சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து மாளிகைக்காடு அந்நூர் ஜும்மாபள்ளிவாசல்நம்பிக்கையாளர் சபைநிர்வாகத்தினதும்,மாளிகைக்காடு மக்களினதும்,அரசஅதிகாரிகளினதும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகளினதும் பங்குபற்றலுடன் முன்னாள் செயலாளர் அபூபக்கர் அஹமட் றியாஸ் நினைவுச்சின்னங்கள், பரிசில்கள், பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டர்.

உலமாக்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், மாளிகைக்காடு கிழக்கு கிராம உத்தியோகத்தர் ஏ.எம். நஜீம் உட்பட பிரதேச பொதுமக்கள் எனப்பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)

# வண்ணாத்திவில்லுப் பிரதேசத்தில் மரை இறைச்சியுடன் ஒருவர் கைது

## இருவர் தப்பியோட்டம்



வண்ணாத்திவில்லு எலுவாங்குளம் இறால்மடு பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் மரை இறைச்சியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் இருவர் தப்பியோடியுள்ளார் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரை இறைச்சியை சட்ட விரோதமாகக் கொண்டு செல்வதாக வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்கள வலய உதவிப் பொறுபதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைதாகினர்.

இதன்போது சுமார் 75 கிலோகிராம் மரை இறைச்சி கைப்பற்றப்பட்டதாகவும், இறைச்சியை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு கத்திகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த விலங்கு இறைச்சிக்காக தப்போவசரணாலயத்தில்வேட்டையாடப்பட்டதாக சந்தேக நபரிடம் விசாரணைகளைமேற்கொண்டபோது தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் எலுவாங்குளம் இறால்மடு பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவரென வனஜீவராசிகள்திணைக்களஅதிகாரி எம்.பி.எல்.எஸ். மாரசிங்ஹ தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வெள்ளிக்கிழமைமாலை புத்தளம் நீதி மன்றநீதிவான் முன்னிலையில்ஆஜர்படுத்தப் பட்ட நிலையில் எதிர் வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 200 ஆண்டுகள் நிறைவில்...!

மலையக இந்தியத் தமிழ் வம்சாவளி மக்கள் இந்த நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டிய விழிப்புணர்வு நிகழ்வுகள் பரவலாக இடம்பெறுகின்றன. வடக்கில் இருந்து மலையகம் வரை இடம்பெற்ற நடைபவனி இதில் கவனத்துக்குரியதொன்று.

பிரித்தானியர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு விவசாயத்திற்காக அழைத்து வரப்பட்டவர்கள், மாறி மாறி வந்த ஆட்சிகளால் தொடர்ந்தும் விவசாயக் கூலிகளாகவே – விவசாயக் கொத்தடிமைகளாகவே – வைக்கப்பட்டிருந்த கொடூரம் குறித்தவிழிப்புணர்வைஏற்படுத்துவதற்குஇந்தநிகழ்வுகள் கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கின்றன. அதன் எதிரொலியை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்திலும் காணமுடிந்தது.

மலையகமக்களுக்குஅநீதிஇழைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும்அனேகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதுவொரு நல்ல சமிஞ்ஞை என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் வரவேற்றிருக்கிறார்.

இந்தநிகழ்வுகளின்விளைவாகமலையகமக்களைத் தேசியநீரோட்டத்தில்இணைக்கவேண்டும்என்று அரசுத் தலைவர்ரணில்விக்கிரமசிங்கவும்தெரிவித்திருக்கிறார். 200 வருடங்கள் கழித்தே ஆட்சியாளர்களுக்கு அந்த மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்கவேண்டும் என்கிற சிந்தனை வந்திருப்பது வெட்கக்கேடானது. மலையக மக்கள் தோட்டங்களைவிட்டு வெளியேறி தமது சுயமுயற்சியினாலேயே தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கான முயற்சிகளில் இறங்கிப் பல காலமாகிவிட்டது. இப்போதுதான் அவர்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான திட்டங்கள் குறித்து ஆட்சியாளர்கள் சிந்திக்கவே தலைப்படுகின்றனர் என்பது மிகக் கொடூரம்.

இந்த 200 ஆண்டுகள் நிகழ்வுகளின் அடிநாதமாக மலையக மக்களுக்கு சொந்தக் காணித் துண்டுகள் வழங்கப்படவேண்டும் என்ற விடயம் மேலெழுந்து வரும் கோரிக்கையாக இருக்கின்றது. தற்போது வரையில்அவர்கள்தோட்டங்களுக்குரிய நிலத்திலேயே வாழ்ந்து வருகின்றார்கள். அதனாலேயே அவர்கள் கொத்தடிமைகள் போன்று நடத்தப்படும் சூழலும் தொடர்கின்றது. அவர்களை அங்கிருந்து மீட்டு நிலச் சுயாதீனத்தை அடைய வைப்பது மிக முக்கியமானது. அதனாலேயே தனித் தனிக் காணிகள் என்கிற கோரிக்கை மிக முக்கியமாக வைக்கப்படுகின்றது. அது மலையக மக்களின் வாழ்க்கையில் உடனடிப் பெரு மாற்றத்தை விளைவிக்க முக்கியமானது.

அதேநேரம் அந்த மக்களின் நீண்டகால – எதிர்கால – திட்டங்கள் குறித்தும் சிந்தித்து அதற்குரிய 10 ஆண்டு, 20 ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். முக்கியமாகக் கல்வியை மையப்படுத்தியதாக இந்தத் திட்டங்களை மலையகத் தலைமைகள், அறிவாளிகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து தயாரித்து எந்த ஆட்சி வந்தாலும்அவைஅந்தத்திட்டத்தைத்தொடரக்கூடியதான நிலையை இப்போதே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதுவேமலையகமக்களின்நிலையானஅபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும்.

மலையக அரசியல் தலைமைகள், ஆட்சியில் உள்ளவர்கள் – ஆளும் தரப்பினர் – எவராயினும் அவர்களுடன் இணைந்து ஆட்சிப் பங்காளிகளாக இருக்கும் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் நிலையில், மலையக மக்களுக்கான நிலையான அபிவிருத்தித்திட்டத்தை உருவாக்கி அதனை அனைத்து ஆட்சியாளர்களையும் தொடரச் செய்வதன் மூலம் அந்த மக்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்த முடியும். 200 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்னும் பல பத்தாண்டுகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் காலம் கடத்தவிடாமல், குறுகிய காலத்திலேயே பெரும் அபிவிருத்தியை மலையக மக்கள் காணக்கூடிய வகையில் இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய அரசியல் சமூக சூழலை மாற்றியமைத்துக்கொள்வதே அரசியல் வெற்றியாக அமையமுடியும்.

# ரணிலின் வெளிநாட்டு பயணங்களால் நாட்டுக்கு கிடைக்கும் பயன்தான் என்ன?

**உப்புல் ஜோசப் பெர்ணான்டோ**



இலங்கையின் ஜனாதிபதிகள் பதவியேற்றவுடன் அமெரிக்காவின், நியூயார்க் நகருக்குச் சென்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்றுவார்கள். அந்தநியூயார்க்பயணம் சொர்க்கத்திற்கு செல்வது போன்றது. ஆனால்ஜனாதிபதிரணசிங்கபிரேமதாச, ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ஒருமுறைகூட ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் உரையாற்றுவதற்கு நியூயோர்க் செல்லவில்லை. 1987 ஆம் ஆண்டு நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அழைப்பின் பேரில் இலங்கையின் பிரதமராக அவர் அங்கு சென்று சர்வதேச வீடமைப்பு ஆண்டை அறிவித்தார். மக்கள் எல்லோருக்கும் வீடு என்பது அவரது கருத்தாகும். ஐக்கிய நாடுகள் சபை அதனை ஏற்றுக்கொண்டு பிரேமதாசாவை வீட்டுவசதி ஆண்டை அறிவிக்குமாறு அழைப்பு விடுத்தது.

ஜனாதிபதியான பின்னர், 4 வருடங்கள் பதவியில் இருந்தபோது, நாட்டின் அரச தலைவராக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் உரையாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஆனால் அவர் அதற்குச் செல்லவில்லை. அவர் ஜனாதிபதியாக இருந்தபோது, வங்கதேசத்தில் நடந்த சார்க் மாநாட்டிற்கும், இந்தியாவின் போத்கயாவில் ஒரு கிராமத்தைத் திறப்பதற்கும் இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே வெளிநாட்டுப் பயணங்களுக்குச் சென்றார்.

இன்று இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான ஆதாரமாக விளங்கும் ஆடைத் தொழில்துறைக்கான ஒதுக்கீடுகள் நியூயார்க், லண்டன் அல்லது பாரிஸ்



நகரங்களுக்கு இந்த நாட்டு ஜனாதிபதி சென்று பெற்றுக் கொள்ளப்பட்டவையல்லை, மாறாக இலங்கையிலிருந்து மிகவும் திறமையான அதிகாரிகள் அந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இலங்கைக்கு செல்லுலார் போன் அறிமுகம், இணைய இணைப்புகளுக்கு அடிப்படையான அடித்தளம் அமைத்தல், கொழும்பு-தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுமதி அனைத்தும் ஜனாதிபதி செயலகத்தின் திறமையான அதிகாரிகளால் கொண்டுவரப்பட்டவை. இவற்றுக்காக ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை அன்று.

வெளிநாட்டிற்குச்சென்று நேரத்தையும் பணத்தையும் வீணடிப்பதை விட, அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை அனுப்பி, வேலையை விரைவாகச் செய்து முடிப்பதே திரு. பிரேமதாசவின் திறமை. பிரேமதாச ஆட்சியில் முன்னாள் மூத்த அரச அதிகாரியாக விளங்கிய ஒருவர் சொன்னது இது.

நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து, கைகுலுக்கி, புகைப்படம் எடுத்து, மக்களுக்கு விற்கும் அரசியலை அவர் செய்யவில்லை. ஆனால் இன்று நிலமை அப்படியல்ல.

ஜனாதிபதி என்ற முறையில் ரணிலின் பயணங்களைப் பார்க்கும்போது, 'உலகம் அவருடன் இருக்கிறது' என்றஎண்ணத்தைஅவைவிற்கின்றன என்று அரசு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இதனை அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தாரா என்பது தெரியவில்லை. ஆனால், அவரது கருத்தை நிரூபிக்கக்கூடிய சிறந்த உதாரணம் ரணிலின் ஜப்பான் சுற்றுப்பயணங்கள்.

ஜப்பான் முன்னாள் பிரதமரின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக அவர் ஜப்பான் சென்றார். அங்கு சென்று ஜப்பானிய பிரதமர் மற்றும் பேரரசரை சந்தித்தார். பின்னர் சமீபத்தில் ஜப்பானிய ஊடக நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த மாநாட்டிற்கும் சென்றிருந்தார். அங்கு ஜப்பான் பிரதமரையும் சந்தித்தார். கடந்த வாரம் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் பல வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

ஜப்பான் கடன் உதவியில் மேற்கொள்ளப்பட இருந்த இலகு தொடருந்துத் திட்டத்தை நிறுத்தும் கோட்டாபய ஆட்சியின் முடிவால் ஏற்பட்ட மோசமான நிலையை மாற்ற ரணில் ஜப்பான் சென்றார். இதன் மூலம் வெளிநாட்டு உதவி மற்றும் முதலீட்டுக்கு ரணில் ஜப்பானைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். இவையெல்லாம் ரணிலுக்கு பன்னாட்டு ஆதரவு பெருகியிருக்கிறது என்கிற தோற்றத்தை ஏற்படுத்தின. ஆனால் உண்மை அதுவல்ல.

ரணில் தனது முதல் பயணமாக ஜப்பான் சென்று இலங்கையின் கடனை மறுசீரமைக்க ஜப்பானில் ஒரு மாநாட்டைக் கூட்டப்போவதாக அறிவித்தார். ஜப்பானுக்குச் சென்று திரும்பிய ரணில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது, கடன்மறுசீரமைப்பு மாநாட்டை நடத்துவதற்கு ஜப்பான் தயார் எனக் கூறினார். ஆனால் ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் அவ்வாறான மாநாட்டை நடத்துவதற்கு ஜப்பான் உடன்படவில்லை எனத் தெரிவித்தார்.

ரணில் இரண்டாவது தடவை ஜப்பான்சென்றபோதுஇலகுதொடருந்துத் திட்டத்தை ஆரம்பிக்க ஜப்பான் தயாராக இருப்பதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார். ஆனால் இலங்கையின் கடனை மறுசீரமைக்கும்வரை ஜப்பான் எந்தவொரு திட்டத்தையும் தொடாது என்று இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு வந்த பின்னர், இலகு தொடருந்துத் திட்டத்தையும் மேலும் பல திட்டங்களையும் தொடங்க ஜப்பான் விருப்பம் தெரிவித்ததாக ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், ஜப்பானின் ஊடக மற்றும்இராஜதந்திரவிவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் யுகிடோ ஒகாகோ வெளியிட்ட சிறப்பு அறிக்கையில், இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள இலகு ரயில் திட்டம் உள்ளிட்ட சிறப்பு திட்டங்கள் குறித்து இலங்கைத் தலைவர்களுடன் விவாதிக்கப்படவில்லை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானில் பரிசீலனைக்காக பல திட்டங்களை முன்வைத்தார், ஆனால் இந்த நேரத்தில் ஜப்பானுக்கு முக்கியமானது இலங்கையின் கடன் மறுசீரமைப்பை விரைவாக முடிக்க வேண்டும்என்பதுதான், கடன்சுமையில் உள்ள நாட்டிற்கு இனி கடன் வழங்க முடியாது என்று தெரிவித்திருந்தார்.

ரணிலின் இரண்டு ஜப்பான் பயணங்களும்பயனளிக்காத பயணங்கள் அல்ல என்பதை இந்த அறிக்கை தெளிவாக்குகிறது. இன்னும் கடன் வாங்கும் முன் கடனைத் தீர்த்து வையுங்கள் என்பதை அறிக்கை சொல்லாமல்சொல்கின்றது. இன்னொரு வியம், மேலும் கடன் வாங்குவது இலங்கைக்கு நல்லதல்ல என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

அடுத்து, விமான நிலையத்திற்குச் செல்லும் பாதையை மூடிய பின்னர் ரணிலின் ஆட்சியை ஒரு பெரிய அறிக்கையை வெளியிட்டது; அமெரிக்க பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்து ரணிலைச் சந்தித்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வந்ததோ சி.ஐ.ஏ. தலைவர். அவரது பயணத்தை அமெரிக்க அரச பிரதிநிதிகள் வருகை தந்ததாகத் தோற்றம் காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. எப்படி இருந்தாலும், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்னும் ரணிலுக்கு வாழ்த்துச் சொல்லவில்லை. சி.ஐ.ஏ. தலைவர் வந்ததை, முதலாளி வந்துவிட்டார் என்று ரணில் இங்கு தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் வேளையில், இலங்கையில் உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று அமெரிக்க செனட் சபையில் அறிவிக்கப்பட்டது. ரணிலின் காதில் அடித்தது போல் இருந்த செய்தி அது.

சமீபத்திய பெருமை, பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் இலங்கை பயணம். பப்புவா நியூகினியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு செல்லும் வழியில் எரிபொருள் நிரப்ப வந்த பிரான்ஸ் அதிபரை சந்திக்க ரணில் விமான நிலையத்திற்கு சென்றார். முன்னதாக தென்னாபிரிக்கஜனாதிபதியும்தனதுவிமானத்தில்எரிபொருள்நிரப்பிஇலங்கைக்கு போக்குவரத்துக்காக வந்து விமான நிலையத்தில் ஓய்வெடுத்தபோது, அவரது பிறந்தநாள் என்பதை அறிந்த ரணில் கேக்கை எடுத்துக் கொண்டு விமான நிலையத்திற்குச் சென்றார். ஆனால் பிரான்ஸ் அதிபரோ, தென்னாப்பிரிக்க அதிபரோ விமான நிலையத்தை விட்டு வெளியே வரவேயில்லை. இதனால், பல்வேறு நாடுகளின் தலைவர்கள் போக்குவரத்தின்போது விமான நிலையங்களின் போக்குவரத்து ஓய்வறைகளுக்கு வருகிறார்கள். பயண சோர்வை போக்கத்தான் அவர்கள் இப்படித் தங்குகிறார்கள். ஆனால், அப்படி வருபவர்களுக்காக வேறு எந்த நாட்டுத் தலைவர்களும்தங்களுடையஅனைத்து வேலைகளையும் நிறுத்துவதில்லை, அவர்களை வரவேற்க விமான நிலையங்களுக்கும் செல்வதில்லை.

உலகமே ஏற்றுக்கொண்ட இலங்கைத் தலைவர் தாம் என்பதை காட்டவே ரணில் இப்படி செய்கிறார். பிரான்ஸ் அதிபரை, தற்போதுபிரான்ஸ்நாட்டின்மிகவும் வெறுக்கப்படும் அதிபர் என்று பிரான்ஸ் ஊடகங்கள் வர்ணிக்கின்றன. சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், 70% நாட்டு மக்கள் அவரை நிராகரிப்பதாக தெரியவந்துள்ளது. அவர் ஜனாதிபதி மாளிகையில்பதுங்கிஇருக்கிறார்எனவும், பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் பயப்படுவதாகவும் கார்டியன் நாளிதழ் கூறுகிறது. காரணம், அவர் கலந்துகொண்ட இரண்டு மூன்று பொது நிகழ்ச்சிகளில் மக்கள் அவரைக் கொச்சைப்படுத்தினார்கள்.

'அவர் எங்கு சென்றாலும் ஓசை கேட்கவில்லை என்றால் ஆச்சரியமாக இருக்கும்' இது கார்டியன் நாளிதழ். பிரான்ஸ் அதிபர் நாட்டிற்குள் செல்லாமல் உலகம் முழுவதும் சென்று தனது சர்வதேச இமேஜை மேம்படுத்த முயற்சிப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறுகின்றன. உலகின் திவாலான நாடுகளை பிரான்சுக்குக் கொண்டு வந்து, அந்த நாடுகளின் கடன்களை மறுசீரமைக்க தலையிட பிரான்சில் ஒரு பெரிய பொருளாதார மாநாட்டை ஏற்பாடு செய்து, உலகின் ஒரு பெரிய போராளி என்று காட்டினார். அந்த மாநாட்டுக்கு உலகத் தலைவர்கள் அனைவரையும் அவர் அழைத்தாலும் ஒரு சிலரே வந்திருந்தனர். இலங்கையும் வங்குரோத்து நாடுஎன்பதால், இலங்கைக்கும்அழைப்பு வந்தது. அப்படித்தான் ரணில் பிரான்ஸ் சென்றார். இறுதியில், திவாலான நாடுகளின் அரச தலைவர்கள் மட்டுமே மாநாட்டிற்குச் சென்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தனது பதவிக் காலத்தில் பிரான்ஸ் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் மூன்று தடவைகள் பிரான்ஸ் சென்றுள்ளார். அப்போதைய பிரான்ஸ் அதிபர் ஜாக்சிராக் அவருக்கு மிக உயர்ந்த அங்கீகாரம் அளித்து, அவர் பிரான்சின் தோழி என்பதை உலகுக்குக் காட்டினார். அவர் பிரான்சுக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தது மற்ற நாடுகளின் தலைவர்களுடன் மாநாடுகளுக்குச் சென்று அல்ல, மாறாக தனக்குக்கிடைத்த அழைப்பின் அடிப்படையில். இரு நாடுகளுக்கும்இடையேஒப்பந்தங்களும் கையெழுத்தானது. கூட்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. அவர் டிசம்பர் 2000 இல் அங்கு பயணம் செய்தார். மார்ச் 2001 பின்னர் அக்டோபர் 2005 ஆகிய 3 ஆண்டுகளும் அவர் பிரான்ஸ் சென்றிருந்தார். அவை வரலாற்றுப் பயணங்கள். விமான நிலையத்திற்கு எரிபொருள் நிரப்ப வந்தபோது சந்தித்த சரித்திரப் பயணம் அல்ல, ஆனால் ராஜபக்சேவினர்மதத்தைவிற்றுஅரசியல் செய்ததுபோல் உலகத்தலைவர்களுக்கு உணவளிக்கும் அரசியல் என்றுதான் இதனைச் சொல்லவேண்டும்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு ஆளுநர் நடவடிக்கையால் சட்டவிரோத காணி வேலி அகற்றம்

நாவலடி சட்டவிரோத காணிகளின் வேலிகள் அதிரடியாக அகற்றப்படுகின்றது. இது மக்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

தொடர்ச்சியாகப் போராடுவோம். நாம் வெறுமனே மற்றவர்கள் போல் வாயால் வடை சுடுபவர்கள் அல்லர். செயல் களத்தில் முன்னின்று மக்களுக்காகப் பாடுபடுபவர்கள். இதனை மக்களும் நன்கு அறிவார்கள்.

இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எனது நன்றிகள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் சரி வடக்கு மற்றும் கிழக்கிலும் சரி மகாவலிஅபிவிருத்திசபையின்காணிப் பிரச்சினைகள் மற்றும் எவ்வாறான பிரச்சினையாக இருக்கட்டும் பிரச்சினையாக இருந்தாலும். நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக பேசுவதால் மட்டும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இவ்வாறான பிரச்சினைகளை தொடர்ச்சியாக விடாப்பிடியான அழுத்தங்கள் வழங்குவதன் மூலமே தீர்த்துக் கொள்ள முடியும் அந்த அடிப்படையிலேகடந்தவாரம்நாவலடி பிரதேசத்திலே நடந்த காணி அபகரிப்பு தொடர்பாகநேரடியாககிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன் அவர் அதற்கான அழுத்தங்களை உடனடியாக வழங்கியிருந்தார். அதற்குரியநடவடிக்கைஎடுப்பதாகவும் கூறியிருந்தார். அதற்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன்.

அத்துடன் அந்தப் பிரச்னையை அதற்கு பொறுப்பான கபினட் அமைச்சரரை சந்தித்து அதற்குரிய தீர்வைக் கேட்டபோது பார்ப்போம் என்று கூறியிருந்தார். அதில் அவரது பதில் சரியான முறையில் வழங்கப்படிருக்கவில்லை. அதற்கு அடுத்த கட்டமாக மகாபலி அபிவிருத்தி நாடாளுமன்ற கோப் குழுவிற்கு சமுகமளித்ததை தொடர்ந்து அங்கும் அவர்களுக்கான அழுத்தங்கள் என்னால் பிரயோகிக்கப்பட்டன.

எமது பிரச்சினைக்குரிய தீர்வை உடனடியாக பெற்று தரும்படி அழுத்தம் கொடுத்தேன். இதனைத் தொடர்ந்து சட்டவிரோத காணிகளில் இடப்பட்டுள்ள அனைத்து வேலிகளும் அகற்றப்பட்டுவருகின்றது.உடனடியாக அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கு அடுத்த கட்டமாக மயிலுத்த மாடுமாதவனைபிரதேசங்களில்உள்ள அத்துமீறிய குடியேற்றங்களையும் அகற்றுவதாக உறுதி தந்துள்ளார்கள்.

எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது என்பது எமது தலையாக பொறுப்புகளில் ஒன்றாகும். தொலைபேசி மற்றும் முகநூல் போன்றவற்றின்ஊடாகஅழுத்தங்களை பிரயோகித்தால் மட்டும் காணாது இவ்வாறான தொடர்ச்சியான நேரடி செயற்பாடுகளின் மூலமே பல விடயங்களுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துமீறி அடைக்கப்பட்ட காணிகள் மற்றும் அத்துமீறி குடியேற்றப்பட்ட காணிகளை மீட்கும் நடவடிக்கைகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றது. இனி வரும் காலங்களில் இவ்வாறான நேரடி நடவடிக்கைகளை இன்னும் மும்முரமாக மக்கள் சார்ந்து நடைமுறைப்படுத்துவோம்மற்றும்முன்நின்று செயற்படுவோம். - என்றார். (05)

# நாடாளுமன்ற பராமரிப்புத்துறை அதிகாரி உடன் பணி இடைநீக்கம்

## பாலியல் குற்றச்சாட்டின் எதிரொலி

நாடாளுமன்ற பராமரிப்புத்துறை உதவிப் பணியாளரை நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி குானி ரோஹணதீர பணி இடைநீக்கம் செய்துள்ளார்.

நாடாளுமன்ற பராமரிப்புப் பிரிவில் பணியாற்றும் பெண்கள் மீது துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த பணி இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பராமரிப்புத்துறை பிரிவில் உள்ள சில பணிப்பெண்களுக்கு பாலியல்துன்புறுத்தல்மற்றும் துஷ்பிரயோகம் செய்வதாக குற்றச்சாட்டுகள்அண்மையில் முன்வைக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பணிப் பெண்கள்வழங்கியதகவலை கவனத்தில் கொண்டு பராமரிப்புத்துறைஉதவிப்பணியாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் வெளியானதையடுத்து, இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தின் பொது செயலாளரால் மூவரடங்கிய குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# ஈரானியர்கள் மூவருக்கு 1 கோடி ரூபா அபராதம்

## தாவர, விலங்கு பாகங்களை சேகரித்ததற்காக

*சிங்கராஜ வனப்பகுதியில்தாவர, விலங்குகளின் பாகங்களை சேகரித்த மூன்று ஈரானியர்களுக்கு உடுகம நீதிவான் நீதிமன்றம் ஒரு கோடியே 32 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.*

*அதன்படி, குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கும் தலா 44 லட்சம் ரூபா அபராதம் விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.*

*ஈரானிய பிரஜைகள் மூவரும் அண்மையில் சிங்கராஜ வனப்பகுதியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்களை சேகரித்துக்கொண்டிருந்த போது நெலுவலங்காகம பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தனர்.*

*வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் நெலுவ பிரதேசத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவால் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (05)*

## பூப்பந்து சுற்றுப்போட்டியில்

# கல்முனை ஸாஹிரா வீரர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

கடந்த 7, 8 ,9 ஆம் திகதிகளில் திருகோணமலை மெகெய்ஸர் மைதானத்தில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்து சுற்றுப்போட்டி-2023 இல் கல்முனை கல்வி வலய கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை வீரர்கள் சிறப்பாக விளையாடி 18 வயதிற்குட்பட்ட வயதுப் பிரிவு சம்பியன் பட்டத்தை பெற்று கிழக்கு மாகாணத்தில் தனக்கான அடையாளத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போட்டியில் கலந்து கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், அவர்களை பயிற்றுவித்து போட்டிக்காக அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர்கள் அன்பு முகைதீன் அப்ராஜ் ரிலா மற்றும் எம்.எச்.எம். முஸ்தன்ஸிர் மற்றும் மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை முதல்வர் எம்.ஐ. ஜாபீர் தெரிவித்தார். (05)







OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# டைனமைற் மீன்பிடியை ஒழிக்க முழு நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



தடை செய்யப்பட்ட கடற்றொழில் முறைகளில் ஒன்றான டைனமைற் மற்றும் வெடிப்பொருள்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடற்றொழிலைத் தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

ஜெல் வோட்டர் (டைனமைற்) பயன்படுத்தி மீன்களை பிடிப்பதால் ஏராளமான மீன் வளங்கள் அழிவடைகின்றன எனவும், இதனைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைதொடர்பில்கலந்துரையாடுவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பதற்காக அமைச்சரவை பத்திரமொன்றை தயாரிக்குமாறும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். டைனமைற் பயன்படுத்தப்படுவதால் திருகோணமலை, கற்பிட்டி, மன்னார் மற்றும் தென்பகுதியிலும் கடல் வளம்அழிக்கப்படுவதாகசுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் - டைனமைற் பயன்படுத்துவோருக்கான விநியோக மார்க்கங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறும் இதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றிவளைப்புகள் தொடர்பில் கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்குமாறும் தெரிவித்தார்.

இதற்கான உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடற்றொழில் சட்டமூலம் மற்றும் சுடுகலங்கள், வெடிபொருள்கள் தடுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் குறித்த சட்டங்களில் இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் இல்லாவிடில் புதிய சட்டமூலங்களைத் தயாரிக்க முடியும் எனவும் கூறினார். டைனமைற் பயன்படுத்துவதால் அழிவடையும் மீன்களை இனங்காண்பதற்கு நாரா நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லையெனில் சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் கடற்றொழில் திணைக்களத்தின் பிராந்திய அதிகாரிகளுக்கு அறிவித்து இம்மீன்களை இனங்காண்பதற்கான திட்டங்களைவகுக்குமாறும் அதற்குரிய நிதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக ரணதுங்க, பொலிஸ் திணைக்கள சுற்றாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு துறைகளின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (05)







## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

புதிய காத்தான்குடி அல்-அக்ஸா ஜும்ஆ பள்ளிவாசலின்கீழ்இயங்கும் குர்ஆன் மதரஸாவில் புனித அல்-குர்ஆனை ஓதி முடித்து பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

அல்-அக்ஸா பெரிய பள்ளிவாசலின் தலைவர் கே.எல்.எம். பரீட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் காத்தான்குடி நகரசபை முன்னாள் உறுப்பினர் முகம்மது ஜவாஹிர், குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



## லக்ஷ்மன் கதிர்காமருக்கு அலி சப்ரி அனுதாபம்

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டு 18 வருடங்களாவதை குறிக்கும் விதத்தில் ருவிட்டரில் பதிவிட்டுள்ள கருத்தில் அலி சப்ரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த புனிதமான நாளில் விடுதலைப்புலிகளின் இரக்கமற்ற வன்முறையால் துரதிஷ்டவசமாக உயிரிழந்த ஒரு சிறந்த இராஜதந்திரி லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவை போன்றுகின்றோம்.

அனைத்து இலங்கையர்களினதும் பொது-வான நோக்கத்துக்கான கதிர்காமரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான அவரது அயராத முயற்சிகள் நமது தேசத்தின் வரலாற்றில் ஓர் அழியாத தடத்தை பதித்துள்ளன.

அமைதியான மற்றும் ஐக்கிய இலங்கைக்கான அவரது தொலைநோக்கு இன்றும் எதிரொலிக்கின்றது, பிளவு மற்றும் வெறுப்பை உருவாக்கும் சக்திகள் உள்ள போதிலும் அமைதி மற்றும் ஒற்றுமைக்காக பாடுபடும் அவரது மரபு அத்தகைய சக்திகளுக்கு ஒரு நிலையான வெறுப்பாக காணப்படுகின்றது.

அவரது வாழ்க்கையை பற்றி சிந்திக்கும்போது அவருடைய அர்ப்பணிப்பிலிருந்து உத்வேகம் பெறுவோம், அவரது குறிப்பிடத்தக்க பயணத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோம் என அலி சப்ரி தெரிவித்துள்ளார். (05)

## புதிய நிர்வாகம் தெரிவு

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் மிகவும் சிறப்பாக இயங்கி வரும் மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைதெரிவும் மாளிகைக்காடு ஸம் ஸம் சனசமூக நூலகக் கட்டடத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல். இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

அமைப்பின் எதிர்கால விடயங்கள் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், பழுதடைந்துள்ள ஜனாஸா வாகனத்தை மீள திருத்தியமைக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இங்குஆராயப்பட்டதுடன்புதிய நிர்வாகதெரிவு இடம்பெற்றது. அமைப்பின் தலைவராக ஏ.எல்.எம். அனுவர் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக சமூக செயற்பாட்டாளர் எம்.ஏ.எஸ். சுல்பிகார் தெரிவு செய்-யப்பட்டார். மேலும் பொருளாளராக ஏ.எல்.எம்.பாயிஸ், உப தலைவராக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.றாபி, உபசெயலாளராக ஏ.எல்.எம். பாஹிம் (ஜிப்ரி), கணக்குப் பரிசோதகராக எம்.ஏ.இக்பால் ஆகியோரும் காரியாலய பொறுப்பாளர்களாக அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களான ஏ.எம்.பஸ்மீர், ஜே.எம். பாஸித், நிதி வசூலிப்புக்கு பொறுப்பாளராக எம்.ஏ.இக்பால் ஆகியோர் சபையோரின் தெரிவுசெய்-யப்பட்டனர்.

ஊடகப் பொறுப்பாளர்களாக ஏ.ஆர்.எம். றாபி, என்.எம்.றுஸ்தி, ஜே.எம். ஹஸான் ஆகியோரும் மாளிகைக்காடுகிழக்குக்கான அமைப்பாளராக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் எப்.எம்.ரஊபி, மாளிகைக்காடு மத்திக்கான அமைப்பாளராக ஏ.எம்.தஸ்மீன், மாளிகைக்காடு மேற்குக்கான அமைப்பாளராக எம்.எம். நபார் ஆகியோரும் அமைப்பின் போசகராக சமூக செயற்பாட்டாளர் யூ.எம்.றியாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (05)

## சாதனையாளர் கௌரவிப்பு













கழக உறுப்பினர்களுக்கான பாராட்டு, சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகளுக்கான கௌரவம், கடந்த வாரம் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தால் சந்தேங்கனி மைதானத்தில் வைத்து பெறப்பட்ட பெஸ்ட் ஓஜ ரீ10 சம்பியன் மற்றும் கியு.எஸ.சி. ரி10 இரண்டாம் நிலை வெற்றி கிண்ணங்களை பெற்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகவீரர்களைகௌரவிக்கும் நிகழ்வும் இளம் வீரர்கள் மற்றும் கழகத்துக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தல் வேலைத் திட்டமும் கழகத்தின் முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழக தலைவர் எம்.பி.எம். பாஜில் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத்தினுடைய பிரதித்தலைவரான சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய பிரதியதிபராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற ஏ.எம்.ஏ. நிஸார், கழகத்தின் ஊடக செயலாளர் நூருல் ஹுதா உமர், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினராக கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டமையை பாராட்டி விஷேட கௌரவிப்பும் இடம்பெற்றது. மேலும் ஆசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மற்றும் சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகளுக்கான கௌரவமும் இடம்பெற்றது.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் சாய்ந்தமருது பொதுநிறுவனங்கள் சம்மேளன தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். பரீட் , சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினரும், தொழிலதிபருமான ஏ.எல். உதுமாலெப்பை, தொழிலதிபர் யூ.எல். சப்ரி, கழக செயலாளர் ஏ.சி.எம்.நிஸார், கழக நிர்வாகிகள், கழக வீரர்கள், சாதனை சிறுமிகளின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் வெள்ளி மாலை சாய்ந்தமருது பொது மைதானத்தில் இடம்பெற்ற நட்புறவு கிரிக்கட் போட்டியில் முதல்பாதி முடிவுற்ற நிலையில் மழை குறுக்கிட்டமையால் போட்டி கைவிடப்பட்டு இரு அணிகளையும் இணை சம்பியன்களாக அறிவிக்கப்பட்டு பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இந்நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (05)

# கிழக்கு ஆளுநரின் உத்தரவின் பேரில் விகாரைக் கட்டுமான பணி நிறுத்தம்

திருகோணமலை நிலாவெளி பெரிய-குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப்பணிகளால்இனமுறுகல்கள் ஏற்படும் என திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடையகவனத்திற்குகொண்டுவந்ததைஅடுத்து நிர்மாணிக்க இருக்கும் விகாரையின் பணிகள் ஆளுநரின்உத்தரவின்பேரில் நிறுத்தப்பட்டன.

திருகோணமலை நிலாவெளி பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கவிருக்கும் பௌத்தவிகாரையின்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து பல சர்ச்சைகள் இடம்பெற்று வருகின்றன.

நிலாவெளி பெரிய-குளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களில் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் 02 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன. அங்கு வாழும் தமிழ் மக்கள் இவ்விகாரை நிர்மாணபணிகள்ஆரம்பிக்க இருப்பதை நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர். இந்நிலையில் விகாரை நிர்மாணப் பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் பாரியதோர் இனமு-றுகல் ஏற்படும். ஆகையால், கிழக்கு மாகாணத்தில்அனைத்துஇன மக்களின்நலன்களைபேணும் ஆளுநர்என்றஅடிப்படையில் இனங்களுக்கிடையில் இனமுறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும்



முகமாக ஆரம்பிக்க இருக்கும் குறித்த விகாரையின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

# போலி சீனக் கடவுச்சீட்டில் நெதர்லாந்து செல்ல முயன்ற இரு இந்தியர்கள் கைது

போலியாக தயாரிக்கப்பட்ட சீன நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி நெதர்லாந்து செல்ல முயற்சித்த இரண்டு இந்திய பிரஜைகளை நேற்று (சனிக்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் வைத்து விமான நிலையத்தின் குடிவரவுமற்றும்குடியகல்வுஅதிகாரிகள்கைதுசெய்துள்ளனர்.

கைதான இருவரும் திபெத் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவர். 43 வயதான ஆண் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச்சேர்ந்தவர்எனவும், அவருடன் கைது செய்-யப்பட்டுள்ள 39 வயதான பெண் உத்தரகாண்ட் மாநிலத்தைச்சேர்ந்தவர்எனவும் விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் சுற்றுலா விசாவில் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இலங்கை வந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 4.45 மணிக்கு புறப்பட்டுச் செல்லும் அல் ஜசீரா விமானத்தில் குவைத்செல்லகட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளனர். இவர்கள் குவைத்தில் இருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகருக்குசென்றுஅங்கிருந்து நெதர்லாந்து செல்ல திட்டமிட்டுள்ளனர். விமானத்தில் ஏறுவதற்கான அட்டையை பெறுவதற்காக அல் ஜசீரா விமான சேவையின் கருமப்பீடத்திற்குசென்றுள்ள நிலையில், அவர்களின் கடவுச்சீட்டை ஆராய்ந்த அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, இருவரையும் குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து,சந்தேக நபர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்ட அதிகாரிகள் அதிலிருந்து இந்திய கடவுச்சீட்டுக்களை கைப்பற்றியுள்ளநிலையில், கைதான இந்திய பிரஜைகளிடம் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டு போலி கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள தரகருக்கு 6 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியதாகவும், கடவுச்சீடுக்களை இலங்கைக்கு வந்த விமானத்தில் வைத்து தரகர் வழங்கியதாகவும் இந்திய பிரஜைகள் அதிகாரிகளிடம் கூறியுள்ளனர். இதனையடுத்து, அவர்களை கைதுசெய்ய அதிகாரிகள், மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையத்தின் குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மின்னல் தாக்கி மூவர் சாவு மிஹிந்தலையில் சம்பவம்

மிஹிந்தலை - தம்மன்னாவ பிரதேசத்தில் மின்னல் தாக்கி மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளது.

வாவியில் மீன்பிடியில் ஈடுபட்ட மூவரே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# 22 வயது பெண் துஷ்பிரயோகம் 17 வயது மாணவன் கைது

மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பாடசாலை மாணவர் ஒருவர் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா-எல நிவந்தம பிரதேசத்தில் வசிக்கும் இருபத்தி இரண்டு வயதுடைய யுவதியே துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மாணவர் அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் எனவும் இருவருக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்தமையும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர் நேற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார்எனபொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# தப்போவ சரணாலயத்தில் பெரும் தீ; 250 ஏக்கர் சாம்பல்





தப்போவசரணாலயத்தில் தீ பரவியுள்ளது. பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. குறித்த தீயால் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளது.

தப்போவ சரணாலயம் 12 ஆம் கட்டைப் பகுதியில் வெள்ளிக்கிழமை நண்பகல் முதல்பரவியதீயினால்சுமார் 250ஏக்கர்நிலப்பரப்புதீக்கிரையாகியுள்ளதாக புத்தளம் மாவட்டஅனர்த்தமுகாமைத்துவமத்தியநிலையத்தின்அதிகாரி தினேந்திர ரனசிங்ஹ தெரிவித்தார்.

குறித்தப் பகுதியில் காட்டுத்தீ பரவியுள்ளதாக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அப்பகுதி மக்கள் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, வனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகள் புத்தளம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையத்துக்கும்புத்தளம் நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்போது, புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிபுரைக்கமைய புத்தளம் இராணுவப் பிரிவினர், புத்தளம் நகரசபை தீயணைப்புப் பிரிவினர் வனஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகளுடன் இணைந்து பாரிய சிரமத்திற்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த தீப்பரவியமைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லையென்றும் மேற்படி சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெல பொலி-ஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்தனர். (05)

# இத்தாலிக்கு அழைப்பதாக 25 லட்சம் ரூபா மோசடி

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாக கூறி 25 லட்ச ரூபா மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாரிடம் வெள்ளிக்கிழமைமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தஇளைஞன்ஒருவரை, இத்தாலியில் வசிக்கும் நபர் தொடர்பு கொண்டு இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாகவும், அதற்காக 25 லட்சம் ரூபா பணத்தைக் கையளிக்குமாறு கூறியுள்ளார்.

இளைஞனும், அவரின் பேச்சைநம்பி, அவர் கூறிய நபரிடம் 25 லட்ச ரூபாய் பணத்தை கையளித்த சில நாள்களில் இத்தாலி விசா எனஒன்றை, இளைஞனிடம் பணத்தை பெற்றுக்கொண்ட நபர் கொடுத்துள்ளார்.

குறித்த விசாவை இத்தாலி தூதரகத்தில் இளைஞனை பரிசோதித்த போது, அது போலி விசா என அதிகாரிகள் கண்டறிந்து இளைஞனுக்குகூறியுள்ளனர்.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயத்தை இளைஞன்அறிந்துகொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (05)

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கல்

## மொஸ்கோ தீர்மானம்

மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகம், முதன்முறையாக ரஷ்ய கூட்டமைப்பில் உள்ள இலங்கை திறன் மிக்க புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளை ஆரம்பித்துள்ளதாகத்தெரிவித்துள்ளது.

இலங்கையின்முழுஅரச நிறுவனமான இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்பு முகவரகத்துடன் இணைந்து வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் திறமையான தையல்காரர்களுக்கு மேலும் 700 வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக நிஸ்னி நோவ்கோரோட் இல் உள்ள பிராந்திய அரசாங்க அதிகாரிகளுடன் முறையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், பல தொழில்நுட்ப வகைகளின் கீழ், ரஷ்ய கூட்டமைப்பு மற்றும் அங்கீகாரம் பெற்ற பிற நாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான பொறிமுறையை மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகம்முன்னெடுத்துள்ளது. (05)



கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அலுவலக பாவனைக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் மின்விசிறிகளை பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபீரிடம் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ.எம். ஜாஹீர் பாடசாலை அதிபர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைத்தார். (05)



# துருக்கியில் பஸ் விபத்து 27 இலங்கையர் காயம்

துருக்கியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் இலங்கைப் பணியாளர்கள் பலர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கியில்,இஸ்தான்புல்விமானநிலையத்தில்பணிபுரியும் இலங்கையர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகி 27 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தச் சம்பவம் இடம்பெற்றபோது குறித்த பஸ்ஸில் 39 இலங்கையர்கள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 27 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

# மூத்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அனுல டி சில்வா கொழும்பில் காலமானார்



மூத்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அனுல டி சில்வா காலமானார்.

கொழும்பு 15, காக்கை தீவில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என உறவினர்கள்தெரிவித்தனர்.

அனுல டி சில்வா எழுத்தாளர், ஊடகவியலாளர், சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஆவார்.

இவர் 1964 இல் லேக் ஹவுஸ் வெளியீடான மிஹிர பத்திரிகைக்கு தனது பங்களிப்பை வழங்கிவந்ததுடன், 50 ஆண்டுகளுக்கு மேலாக 8 இற்கு மேற்பட்ட பத்திரிகைகளில் ஊடகவியலாளராகவும் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

பிரபலமான நாவல்கள் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட புத்தகங்களை அனுல டி சில்வா எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# புலம்பெயர் தொழிலாளர்கள் மூலம் 3 பில்லியன் டொலர் கிடைத்தது

2023 ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் மட்டும் 541 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் உடன் ஒப்பிடுகையில் 261 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரையில்மொத்தம்3,363.6மில்லியன்அமெரிக்கடொலர்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கெக்கிராவையில் குடும்பஸ்தர் வெள்ளி இரவு சுட்டுக்கொலை

கெக்கிராவையில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ளது கெக்கிராவை. அங்கு வெள்ளிக்கிழமை இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கெக்கிராவை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆர்.டி.சஞ்சீவ (வயது 41) என்ற நபரே துப்பாக்கிச்சூட்டில் சாவடைந்துள்ளார்.

சிகைஅலங்காரநிலையஉரிமையாளரான குறித்த நபர், நேற்று இரவு வேலை முடிந்து வீட்டுக்கு வந்துள்ளார். அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர், வீட்டுக்குள் புகுந்து அவரைச் சுட்டுப் படுகொலைசெய்துவிட்டுத்தப்பியோடியுள்ளனர்.

உயிரிழந்த நபரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2023இல் வெளியிடப்பெற்றது.